# கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு - I

## பகுதி - 2

**Kerala Reader - Tamil**
**Standard - I**
**Part - 2**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) கேரளம்
2014

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு.
இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.
எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன்.
அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன்.
அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.
என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.
எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன்.
எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன்.
அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

Prepared by :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
Website: www.scertkerala.gov.in
e-mail: scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
First Edition: 2014
© Government of Kerala • Department of Education

## மலரும் முல்லை மொட்டுக்களே!

இந்நூலில்...
உங்களுக்கு விருப்பமான
கதைகள் உள்ளன;
பாடல்கள் உள்ளன.
தனித்தும்
உங்கள் நண்பர்களோடு
சேர்ந்தும் செயல்பட
ஏராளம் செயல்பாடுகள் உள்ளன.
வரைந்தும் வாசித்தும் எழுதியும் வளர
வாசற்கதவு
இதோ...
உங்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
தேன் தேடும் பட்டாம்பூச்சியாய்ப்
பறந்து பறந்து அறிவுத்தேன் எடுக்க
இந்நூல் உங்களுக்காக
வடிவமைக்கப்பட்டுள்ளது.
தங்கள் கற்றல் சிறக்க வாழ்த்துகள்.

பேரா. கே.ஏ.ஹாஷிம்
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

# Textbook Development Committee

## Tamil (Part - 2)

### Members

Babu.S, PD Tr., GLPS, Devikulam, Idukki.

Beula Elezabeth.A, UPSA, GUPS,Malakkappara, Trichur.

Dominic Savio.J, HSA, SFXHS, Parisakkal, Palakkad.

Krishnamoorthy.M, PD Tr., GLPS, Kunnamkattupathy, Palakkad.

Muniyandi.K, LPSA, GHS, Meenachipuram, Palakkad.

Prakasam.P, LPSA, ALPS., Kallaar Munnar, Idukki.

Robert Xavier.M, Headmaster, ALPS, Attempathy, Palakkad.

Selvam.Y, LPSA, Lutheran LPS., Dymock, Idukki.

Thankaraju.T, LPSA, G.H.S., Meenachipuram, Palakkad.

Venu Gopal.G, PD Tr., G.L.P.S., Perumparachalla, Palakkad.

Dr.Vishnukumaran.T, Asst.Prof., Dravidian University, Andhra Pradesh.

### Experts

Dr. Doctor Nazeemdheen.P, (Prof.Rtd.), University of Kerala

Dr. Parasuraman.T, Prof., PILC, Pondicherry.

Dr. Ratnasabapathy.P, Prof.(Rtd.), Chennai.

Dr. Veerappan.P, Prof., (Rtd.), NCERT, Mysore.

Dr. Gomathynayagam.E, Guest. Lr, University of Madras, Chennai.

### Artists

Krishnan Kutty, Spl.tr., Palakkad.

Nandhakumar.C, Chittur, Palakkad.

**Academic Co-ordinator**

Dr.Sahaya Dhas.D, Research Officer, SCERT.


State Council of Educational Research and Training(SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 07 | அறுசுவை | 104 - 117 |
| 08 | குளித்துக் குடி | 118 - 129 |
| 09 | வா... வா... நாய்க்குட்டி | 130 - 143 |
| 10 | நம்மைச் சுற்றி | 144 - 161 |
| 11 | வேகம் | 162 - 179 |
| 12 | ஒற்றையா இரட்டையா? | 180 - 192 |







பெயர் :
வகுப்பு :
அப்பா பெயர் :
அம்மா பெயர் :
ஊர் :
அலைபேசி எண் :

அலகு 7

# அறுசுவை

## மணக்க... மணக்க...







அரிசிக் காடு போகலாம்
அரிசி மூட்டை வாங்கலாம்!
கழுவி உலையில் போட்டுமே
சோறு நாமும் சமைக்கலாம்!

கத்தரிக் காடு போகலாம்
கத்திரிக்காய் வாங்கலாம்!
நறுக்கி நறுக்கிப் போட்டுமே
நாமும் குழம்பு வைக்கலாம்!





கோவைக் காடு போகலாம்
கோவைக் காயும் வாங்கலாம்!
பொடிப் பொடியாய் நறுக்கியே
பொரியல் நாமும் செய்யலாம்!





மணக்க மணக்க சமைக்கலாம்
மனம் குளிர உண்ணலாம்!
விரைந்து ஓடி வாருங்கள்
விருந்து உண்டு மகிழலாம்!



## உரையாடுங்கள்.

* பாடலில் என்னென்ன உணவுப் பொருள்கள் உள்ளன?
* விலங்குகள் குழம்புவைக்க என்ன காய்கறிகள் வாங்கியிருக்கும்?
* பொரியல்செய்ய என்னென்ன காய்கறிகள் வாங்கலாம்?


## குழுவில் சேராததை வட்டமிடுங்கள்.



## பெயர் எழுதுங்கள்.

* கோ என்ற எழுத்தில் தொடங்கும் காய்
* கொ என்ற எழுத்தில் தொடங்கும் பறவை

## வண்ணம் தீட்டுவோம்; பெயர் எழுதுவோம்.




கா

கே

கோ

# எனக்கு விருப்பமானது.




எனக்குப் பிடித்த உணவு

## குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்; கூறுங்கள்.

❀ கொ, பொ, தொ, கோ






## இணையுங்கள்.

உணவு இது. உணவுப் பொருள் எது?

| உணவு | உணவுப் பொருள் |
| --- | --- |
| சப்பாத்தி | உளுந்து |
| தோசை | காய்கறிகள் |
| சோறு | அரிசியும் உளுந்தும் |
| சாம்பார் | கோதுமை |
| வடை | அரிசி |





## கட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்கள் உருவாக்குவோம்!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பி | த | வ | அ | கே | | |
| கோ | இ | கொ | ண் | செ | | |
| லை | போ | ஆ | வீ | க | | |
| ட் | ளை | உ | டை | ல் | | |
| சே | டு | டி | கெ | ம் | | |

## சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியம் உருவாக்குவோம்!

காலையில், கூவும், சேவல்

முட்டை, கோழி, இடும்

வெள்ளை, கொக்கு, நிறம்


## எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

- பபம்டப் - ..........
- யரிபொல் - ..........
- வசேல் - ..........

## படங்களை வரிசைப்படுத்துங்கள்; கதை சொல்லுங்கள்.









# காட்டிலே விருந்து




மருதமலைக் காட்டில் விருந்து...

எங்கும் ஒரே ஆரவாரம்.

மானம்மாவுக்குத்தான் சமையல் பொறுப்பு.

மானம்மாவின் சமையல் என்றால் கேட்கவா வேண்டும்!



வேலைகளைப் பங்கிட்டது மான் மாமி.

“ஆவியில் வேக வைப்பதை நான் செய்கிறேன்”


ஆடு கூறியது.

“எண்ணெய்யில் சுடுவதை நான் செய்கிறேன்”

நரியக்கா சொன்னது.

“அவியல், பொரியல், சாம்பார்
செய்வது எனது வேலை”

மயிலம்மா கூறியது.





“சுவையான பாயசம் நான் செய்கிறேன்.”

மானம்மா கூறியது.

விருந்து தயார் ஆனது.

“பழம், பப்படம் எங்கே?”

யானையார் அலறினார்.

## உரையாடுங்கள்.

- காட்டில் நடந்த விருந்தில் ஆடு என்னென்ன சமைத்திருக்கும்?
- நரியக்கா என்னென்ன சமைத்திருக்கும்?

## வட்டமிடுங்கள்.

இதற்கு இது வேண்டாம். அது எது?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இட்லி | - | அரிசி | கோதுமை | உப்பு | உளுந்து |
| தோசை | - | அரிசி | உளுந்து | உப்பு | கோதுமை |
| மிளகாய் பஜ்ஜி | - | உப்பு | மிளகாய் | சர்க்கரை | கடலைமாவு |
| பணியாரம் | - | பச்சரிசி | தேங்காய் | கிழங்கு | சர்க்கரை |

## சொல்லிப் பழகுங்கள்.

தோட்டமாம் தோட்டம், பப்பாளித் தோட்டம்
படுத்த பாயைச் சுருட்டிக்கொண்டு எடுத்தானாம் ஓட்டம்.

## பட்டியலிடுங்கள்.

| ஆவியில் வேக வைப்பது | எண்ணெயில் சுடுவது |
|---|---|
| | |
| | |
| | |
| | |

## குழுவில் சேராதது எது?

| | | |
|---|---|---|
| புட்டு | இட்லி | பூரி |
| வடை | பஜ்ஜி | பழம் |
| பாயசம் | லட்டு | புளிசாதம் |

## வரிசைப்படுத்துங்கள்; கதை சொல்லுங்கள்.

வடையை எடுத்தது.

நரி வந்தது.

பாட்டி வடை சுட்டாள்.

காகம் பார்த்தது.


வடை கீழே விழுந்தது.

பாட்டுப் பாடச் சொன்னது.

மரத்தில் அமர்ந்தது.

காகம் கா... கா... என்று பாடியது.

# விருந்திற்கு வந்த குரங்கு



மருத மலைக் குரங்குதான்
மானம்மா விருந்திலே
மிளகாய்ப் பஜ்ஜி தின்றதாம்
மீசை துடிக்க நின்றதாம்!

முள்ளு வேலி ஓரத்தில்
மூன்று பஜ்ஜி கிடந்ததாம்.
மெல்ல அதை எடுத்ததாம்
மேலே வீசி எறிந்ததாம்!





மைனா ஒன்று வந்ததாம்.
மொத்தம் பத்துத் தின்றதாம்.
மோசம் போன குரங்குமே
மௌன மாக அழுததாம்!



## எழுதுங்கள்.

* பாடல் வரிகளில் உள்ள முதல் எழுத்துகளை மட்டும் எடுத்து வரிசையாக எழுதுங்கள்.

## சொல்லுங்கள்.

* நீங்கள் எழுதிய எழுத்துகளை உங்களால் எவ்வளவு வேகமாகச் சொல்ல முடியும்?

* அந்த எழுத்துகளில் தொடங்கும் வேறு சொற்களைக் கூற முடியுமா?

## தொடர்ந்து சொல்லுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பஜ்ஜி தின்னலாம் | பாயசம் குடிக்கலாம் | பூந்தி தின்னலாம் | போண்டா தின்னலாம் |
| ப ப ப | பா பா பா | பூ பூ பூ | போ போ போ |

## என்ன சுவை?

லட்டு
தேன்
பாகற்காய்
புளியங்காய்
உப்பு
நெல்லிக்காய்
மாங்காய்
மிளகாய்

........................ எரிக்கும்

.................................... புளிக்கும்

.................................... கசக்கும்

.................................... இனிக்கும்

.................................... உவர்க்கும்

.................................... துவர்க்கும்

### நான் கற்ற சொற்கள்

### நான் உருவாக்கிய சொற்கள்

## நானே பாடுவேன்!



தொப்பி வைத்த மாலா

தோப்புப் பக்கம் போனாள்

பலமாய்க் காற்று வீசவே

தொப்பி பறந்து போனதே!



பொட்டு வைத்த மாலா

அழகாய்க் கோலம் போட்டாள்

கனத்த மழை பெய்யவே

கோலம் அழிந்து போனதே!



மொட்டை போட்ட மாலா

கொக்குப் பிடிக்கப் போனாள்


கொக்குப் பறந்து போகவே

கோப மாக நின்றாளே!

அலகு 8

# குளித்துக் குடி

## பசிவந்தால்...



ஆற்றங்கரை.....!

சேறும் சகதியுமாய் இருந்தது.

குட்டியானை அதில் புரண்டு

விளையாடிக்கொண்டிருந்தது...!

அப்போது...

தாய் யானை வந்தது.

அதன் கையில் வாழைக்குலை.

குட்டியானை ஓடியது.

“அம்மா பழம் தா...” என்றது.

“உனது தும்பிக்கையைப் பார்!

எவ்வளவு அழுக்கு!

ஆற்று நீரில் கழுவு

அப்புறம் தருகிறேன்!”


தாய் யானை சொன்னது.

குட்டி யானை ஆற்றை நோக்கி ஓடியது.

தும்பிக்கையைச் சுத்தம் செய்தது.

அழுக்குப் போனது.

பழத்தை ருசித்துத் தின்னத் தொடங்கியது.





## சொல்லுங்கள்.

- தாய் யானை குட்டியானையிடம் தும்பிக்கையைக் கழுவச் சொன்னதன் காரணம் என்ன?
- கை கழுவாமல் சாப்பிட்டால் என்னென்ன பிரச்சினைகள் ஏற்படும்?
- சாப்பிடுவதற்கு முன் நீங்கள் கை கழுவுவது உண்டா?

## வரிசைப்படுத்துவோம்!



## நீங்கள் குளிக்கும்போது...

- நீங்கள் எங்குக் குளிக்கிறீர்கள்?
- குளிக்க என்னென்ன பொருள்களைப் பயன்படுத்துகிறீர்கள்?
- உங்களால் இரண்டு நிமிடத்தில் எத்தனை சோப்புகளின் பெயர்களைக் கூற முடியும்?

## தகுந்த அடையாளம் ☒ ☑ இடுவோம்!

- காலை எழுந்தவுடனும் இரவு படுக்கும் முன்னும் பல் துலக்க வேண்டும். ☐
- திறந்த இடங்களில் காலைக்கடன்களை முடிக்கலாம். ☐
- உணவு உண்பதற்கு முன்பும் உணவு உண்ட பின்பும் கை, வாய் கழுவ வேண்டும். ☐
- கண்ட இடங்களில் எச்சில் துப்பக் கூடாது. ☐
- தினமும் குளிக்க வேண்டாம். ☐

## நானே பாடுவேன்...

குட்டி யானையாம் - அழகுக்
குட்டி யானையாம்
தலையைத் தலையை ஆட்டி நடக்கும்
குட்டி யானையாம்
குட்டி யானையாம் - நல்ல
குட்டி யானையாம்
காதைக் காதை ஆட்டி நடக்கும்
குட்டி யானையாம்.



# என்ன நடந்திருக்கும்?












படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.

## கண்ணுக்குத் தெரியாமல்,...

தாய் யானை : தும்பிக்கையைக் கழுவியிருந்தால் இப்படி நடந்திருக்காது.

குட்டி யானை : அப்பொழுது என் கையில் அழுக்கு இருந்தது தெரியவில்லை. அதனால் தான் நான் கழுவவில்லை.

தாய் யானை : அப்படியல்ல. கண்ணே! நம் கண்களுக்குத் தெரியாமல்கூடக் கையில் அழுக்கு ஒட்டியிருக்கும். அது கழுவினால் தான் போகும்.

குட்டி யானை : சரிம்மா. இனிமேல் கைகளை நன்றாகக் கழுவியபின் தான் எதையும் சாப்பிடுவேன்.

## செய்து பாருங்கள்,

ஒரு வாளியில் தெளிந்த நீரை எடுங்கள். தண்ணீர் தெளிந்தது தான் என்று உறுதி செய்யுங்கள். ஒவ்வொருவராக வந்து வாளியில் கையை முக்கிக் கழுவுங்கள். அனைவரும் கழுவிய பின் தண்ணீரில் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனியுங்கள்.



நான் கண்ட உண்மை,

நான் கற்ற பாடம்,

# குட்டியானை குளித்தது



குட்டி யானை சேற்றிலே
குட்டிக் கரணம் போட்டதே!

சேறு புரண்ட உடலுடன்
அலைந்து திரிந்து நடந்ததே!

வெயிலும் நன்றாய் ஏறவே
தோலும் வறண்டு போனதே!



“ஐயோ அம்மா அரிக்குதே”

என்று அலறித் துடித்ததே!

ஆற்றை நோக்கி ஓடியே


ஆசை தீரக் குளித்ததே!

உடல் அரிப்புக் குறையவே

உற்சாகமாய்க் குளித்ததே!

நன்றாய்த் தினமும் குளிக்கலாம்

நலமாய் நாமும் வாழலாம்!



## வகைப்படுத்தலாம்!







| தானே நீரில் குளிப்பவை | நாக்கால் உடலைச் சுத்தம் செய்பவை | அலகால் உடலைச் சுத்தம் செய்பவை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |












## வரைவோம்; வண்ணம் தீட்டுவோம்!



கதை நேரம் :-


# ஆமையும் முயலும்



ஆமை மெதுவாக நடக்கும்.
முயல் வேகமாக ஓடும்.
அதனால் முயல்
ஆமையைக் கேலி செய்யும்.
ஒரு நாள்...
“என்னைச் சும்மா கேலி செய்யாதே!”
ஆமை கெஞ்சியது.



“ஒரு ஓட்டப் பந்தயம் வைப்போம்.
நீ வெற்றி பெற்றுவிட்டால்...
உன்னைக் கேலி செய்யமாட்டேன்”.
முயல் போட்டிக்கு அழைத்தது.
“சரி”. ஆமை சம்மதித்தது.
“அடுத்த காட்டில் உள்ள
ஆலமரத்தைத் தொடவேண்டும்.
யார் முதலில் தொடுகிறார்களோ
அவருக்கே வெற்றி”.



விலங்குகள் எல்லாம் கூடின.
“ரெடி... 1... 2... 3...”
போட்டி தொடங்கியது.
“சொய்ங்... சொய்ங்...”
முயல் குதித்துக் குதித்து ஓடத் தொடங்கியது.
“மெல்ல... மெல்ல...”
ஆமையும் நடக்கத் தொடங்கியது.
“சே... இந்த ஆமை நடந்து நடந்து
எங்கே வெற்றிபெறப் போகுது?”
அனைவரும் வெற்றி பெறும் முயலைப் பார்க்க
அடுத்த காட்டிற்குச் சென்றனர்.



ஆனால்...
ஆமையே வென்றது.
ஆமை எப்படி வென்றிருக்கும்?

அலகு 9

# வா.. வா.. நாய்குட்டி...

## வௌ... வௌ...



'வௌ வௌ' நாய்க்குட்டி.

அது கோகிலாவின் நாய்க்குட்டி.

அது விழித்தெழுந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தது.

'கீச் கீச்' அணில்.


அது வாழை இலையில் இருந்தது.

'கா கா' காகம்.

அது வாசலில் நின்றது.

'கொக் கொக்' கோழி.

முற்றத்தில் இருந்தது.



“வௌ வௌ வௌ”

நாய்க்குட்டி குரைத்தது.

யாரும் அசையவில்லை.

அணிலை விரட்டியது.

அது தென்னையில் ஏறியது.

காகத்தை விரட்டியது.

அது பறந்து போனது.

கோழியை விரட்டியது.

கோழிக்குக் கோபம் வந்தது.

“டொக்...”

வௌ வௌ முகத்தில்

ஓங்கி ஒரு கொத்து!

“ஐயோ...!”

வௌ வௌ வௌ

அலறி ஓடியது.



## உரையாடுங்கள்.

- ‘வௌவௌ’ ஏன் அலறியது?
- ‘வௌவௌ’ என்னென்ன செய்தது?
- உங்கள் வீட்டருகே என்னென்ன உயிரினங்கள் வாழ்கின்றன?


## வட்டமிடுங்கள்.

- பாடப்பகுதியில் வரும் உயிரினங்களை வட்டமிடுங்கள்.

## அவள் யார்?

- வெள்ளை நிறக் கொண்டைக்காரி;
  ஒற்றைக் காலில் நிற்பாள். அவள் யார்?

## சொற்கள் உருவாக்குவோம்!




## கண்டுபிடிப்போம்; எழுதுவோம்!

- நான் வீட்டில் வசிப்பேன்;
  சுவரில் நடப்பேன்.



- நான் தோட்டத்தில் வசிப்பேன்;
  அடிக்கடி நிறம் மாறுவேன்.




- நான் மரத்தில் வசிப்பேன்;
  பழத்தைக் கொறித்துக்
  கொறித்துத் தின்பேன்.




- நான் அழுக்கு நீரில் இருப்பேன்;
  இரத்தம் குடித்து மகிழ்வேன்.



- பூக்கள் தோறும் பறப்பேன்;
  தேனைக் குடித்து மகிழ்வேன்.



- சமையலறையில் வசிப்பேன்;
  எல்லாம் கடித்துத் தின்பேன்.



# வா... வா... நாய்க்குட்டி...!

வா...! வா...! நாய்க்குட்டி
வாலை ஆட்டும் நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி
நன்றி காட்டும் நாய்க்குட்டி.

வீட்டைச் சுற்றி ஓடியே...
சேட்டை நீயும் செய்கிறாய்!
குச்சி காட்டி மிரட்டினால்
கோபம்கொண்டு முறைக்கிறாய்!


கறியும் சோறும் தருகிறேன்
கடலை மிட்டாய் தருகிறேன்.
திண்ணை மீது படுத்திடு
திருடன் வந்தால் விரட்டிடு!




## உரையாடுங்கள்.


- உங்கள் வீட்டில் செல்லப் பிராணி உண்டா?
- உங்கள் வீட்டுச் செல்லப் பிராணியின் பெயர் என்ன?
- உங்கள் வீட்டுச் செல்லப் பிராணி என்னென்ன செய்யும்?

## ஒரு சொல்லில் பல சொற்கள்





## படம் வரைவோம்; வண்ணம் தீட்டுவோம்!




## இணையுங்கள்.



பசு



கோழி



ஆடு

குட்டி

கன்று

குஞ்சு

## வரிசைப்படுத்துங்கள்; கதை சொல்லுங்கள்.










## படத்தைச் சேர்த்து வாசிப்போம்!

 உறங்கிக்கொண்டிருந்தது.

 பறந்து வந்தது.

 மெல்ல நடந்து வந்தது.

வழியில்  யைப் பார்த்தது.

பசுவின் மீது குருவி அமர்ந்தது. பூனை மெதுவாகப் பசுவின் காலைக் கடிக்கப்போனது.  வந்தது. பசுவைக் கடித்தது.

பசுவுக்குக் கோபம் வந்தது. பூனையை எட்டி உதைத்தது.

“மியாவ்... மியாவ்...” எனக் கத்திக்கொண்டே பூனை ஓடியது.

குருவி சிரித்தது. நாயும் சிரித்தது.

# வெற்றி யாருக்கு?

உயிர்க்காட்சிக் கூடத்திலே போட்டிகள்!

யானைகள் வடம் இழுத்தன.

வழுக்கிக் கீழே விழுந்தன.


பசுவும் எருமையும் சிரித்தன.

எறிபந்தை எடுக்க நாய்கள் ஓடின.

முட்டி மோதி விழுந்தன.

பூனைகள் கைகொட்டிச் சிரித்தன.

மணலில் ஓட்டப்பந்தயம்!



காளை விசில் அடித்தது.

ஒட்டகமும் குதிரையும் ஓடின.

“ஓடு... ஓடு... ஓடு..!”

கிளியும் புறாவும் கூவின.

புழுதி எங்கும் பறந்தது.


வெற்றி யாருக்கு?



## உரையாடுங்கள்.

- என்னென்ன போட்டிகள் நடந்தன?
- ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றது யாராக இருக்கும்? ஏன்?

## சொல் ஒன்று; பொருள் இரண்டு.



கூரையில் வேய்வது ஓடு.

**ஓடு**




வேகமாக நீயும் ஓடு.



பூக்கள் சேர்த்துக்கட்டுவது மாலை.

**மாலை**



பொழுது சாயும் நேரம் மாலை.



**ஆடு**



## வட்டமிடுங்கள்; எழுதுங்கள்.

- பாடப்பகுதியில் வந்துள்ள வளர்ப்புப் பிராணிகளை வட்டமிடுங்கள்; எழுதுங்கள்.

.................... .................... .................... ....................

.................... .................... .................... ....................

## இணைப்போம்!

| | | |
|---|---|---|
| நாய் | | பேசும் |
| பூனை | | கூவும் |
| யானை | | கனைக்கும் |
| சேவல் | | குரைக்கும் |
| கிளி | | கத்தும் |
| குதிரை | | பிளிறும் |

## கல்... கல்... என்ன கல்?

சுவரிலே இருக்கும் கல்... என்ன கல்?

உண்ணும்போது வரும் கல்... என்ன கல்?

வானிலே வரும் கல்... என்ன கல்?

| நான் கற்ற சொற்கள் | நான் உருவாக்கிய சொற்கள் |
|---|---|
| | |

படங்கள் சேகரித்து ஒட்டுங்கள்.

| வீட்டில் வளர்க்கும் விலங்குகள் | | | வீட்டில் வளர்க்கும் பறவைகள் | | |
|---|---|---|---|---|---|
|  | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## இவர்கள் என்ன சொல்வார்கள்?

நான்
யானை! நிலத்திலே
பெரிய விலங்கு. எனக்குத்
தும்பிக்கை உண்டு. தடியை
இழுக்க உதவுவேன்.

நான்
காளை. எனக்குக்
கொம்பு உண்டு.
நான் விவசாயிகளின்
தோழன். உழைப்பாளி.
நான் ஏர் உழுவேன்;
வண்டி இழுப்பேன்.




















அலகு 10

# நம்மைச் சுற்றி...

## பலூன் வெடித்தது



வீட்டில் ஒரே இருட்டு.

அனைவரும் உறக்கத்தில் இருந்தனர்.

முகிலன் மட்டும் உறங்கவில்லை.

அவன் மெல்ல எழுந்தான்.

சுற்றிலும் பார்த்தான்.

இதுதான் சரியான நேரம்.

குறும்புக்கார முகிலன் பலூனை நோக்கி நடந்தான்.

அவன் கையில் குண்டூசி.





ஓங்கி ஒரு குத்து.

“டமார்...” பலூன் வெடித்தது.

“ஐயோ... அம்மா...”

“மியாவ்...”

“வௌ... வௌ...”

“கொக்கரக்கோ...”

“மே... மே...”

“ம்மா....”

“கீ.... கீ.... குவாக்... குவாக்.....”

எங்கும் ஒரே அலறல்.

முகிலன் சிரித்தான்.





## படம் பார்த்துச் சொல்லுங்கள்.

- வீட்டில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன?
- வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

## உரையாடுங்கள்.

- பலூன் வெடித்தபோது யாரெல்லாம் அலறினார்கள்?
- பலூன் வெடித்தபோது அமைதியாக இருந்தவை எவை? காரணம் என்ன?

## சத்தம் யாருடையது? எழுதுங்கள்.

| | |
|---|---|
| மியாவ்... மியாவ்... | பூனை |
| வெள... வெள... | |
| கொக்கரக்கோ.. கோ... | |
| மே... மே... | |
| குவாக் குவாக் | |


## குழுவில் சேராதது எது?

| | | | |
|---|---|---|---|
| ✽ | நாய் | வாத்து | மேசை |
| ✽ | கோழி | கட்டில் | அம்மா |
| ✽ | பாய் | நாய் | தாய் |
| ✽ | நாற்காலி | பசு | அலமாரி |

## ஒற்றுமையைக் கண்டுபிடியுங்கள்.


விமானம்


பருந்து


பசு


கட்டில்


மோட்டார் வண்டி


மான்


கப்பல்


மீன்

பட்டியலிடுங்கள்.

| உயிருள்ளவை | உயிரற்றவை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

வித்தியாசம் கூற முடியுமா?





கதை நேரம்:-


# நான் பங்கிட்டுத் தருகிறேன்



சின்னுப் பூனையும் மின்னுப் பூனையும் நண்பர்கள்.
ஒரு நாள்...
அவை கடைவீதிக்குச் சென்றன.
“ஹையா.. அதோ பார், அப்பம்!” சின்னு காட்டியது.
மின்னு விரைந்து ஓடியது.
அப்பத்தை எடுத்தது.
“அப்பத்தைக் காட்டியவன் நான்” சின்னு சொன்னது.
“அப்பத்தை எடுத்தவன் நான்;
அப்பம் எனக்குத் தான்” மின்னு சொன்னது.



குரங்கு வந்தது.
“அந்த அப்பத்தைத் தா!
நான் பங்கிட்டுத் தருகிறேன்”
குரங்கு அப்பத்தை வாங்கியது.
இரண்டாய்ப் பிய்த்தது.
“ஐயையோ! ஒன்று சின்னதாகிப் போச்சே!
“சின்னத் துண்டு எனக்கு வேண்டாம்.”
இருவரும் கூறினர்.
குரங்கு பெரியதைக் கடித்தது.
பெரிய துண்டு சின்னதாகிப் போனது.
“சின்னத் துண்டு எனக்கு வேண்டாம்.”
இருவரும் மீண்டும் கூறினர்.
குரங்கு பெரியதைக் கடித்தது.




..............................................................................

..............................................................................

..............................................................................


சின்னுவும் மின்னுவும் ஏமாந்து போயின.

# சண்டை வந்தது


ஏய் அணிலே... அழகாகப் பழுத்திருக்கும் என் பழங்களின் மீது ஏறி விளையாடுகிறாயே! இறங்கிப் போ.
என்னையா மிரட்டுகிறாய்? இரு.. இரு.. உன்னை என்ன செய்கிறேன் பார்?


தக்காளிச் செடிக்கு ரொம்பத் திமிரு! என்னை மிரட்டுகிறது.
உன்னையா மிரட்டியது? வா... அதை ஒரு கை பார்த்துவிடலாம்.


யாரடா அது?
எங்கள் அணிலை மிரட்டியது?
என்னடா
எல்லாரும் வந்து தக்காளிச்
செடியை மிரட்டுறீங்க! அதன்
பழத்தைத் தின்றுவிட்டு
நன்றியில்லாமல் இப்படி
சண்டைக்கு வர்றீங்களே!
இருக்கிற இடத்தை
விட்டு நகரமுடியாதவன்
எல்லாம் நியாயம் பேச
வந்துட்டான்.
போடா போ...
வா... அணிலே வா...
பழத்தைச் சாப்பிடுவோம்.
யார் என்ன பண்ணுவார்கள்
பார்க்கலாம்?




## கதை சொல்லுங்கள்.

- படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.

## நடித்துப் பார்ப்போமா?

- **சண்டை வந்தது** கதையை நடித்துக்காட்டுங்கள்.

## சொல்லுங்கள்.

- தக்காளிச் செடிக்குச் சாதகமாகப் பேசியது எது?
- பாம்பும் அணிலும் தென்னையை என்ன சொல்லிக் கேலி செய்தன?
- '**ண்டு**' என்று முடியும் எத்தனைச் சொற்களை இரண்டு நிமிடத்திற்குள் உங்களால் சொல்ல முடியும்?

| | | | |
|---|---|---|---|
| பூண்டு | நண்டு | | |

## உரையாடலை முழுமைப்படுத்துங்கள்.

தக்காளிச் செடி : நான் நாளும் வளர்வேன்.

அணில் : நானும்தான் நாளும் வளர்கிறேன்.

தக்காளிச் செடி : என் விதையை ஊன்றினால் என்னைப் போலவே ஒரு செடி வரும் தெரியுமா?

அணில் : நானும் தான் என்னைப் போலவே ஒரு குட்டி போடுவேன். வேறு ஏதாவது இருந்தால் சொல்.

தக்காளிச் செடி : ________________________________

அணில் : ________________________________

தக்காளிச் செடி : ________________________________

அணில் : ________________________________

தக்காளிச் செடியும் தன் தோல்வியை ஒத்துக்கொண்டது.

அணிலும் தன்னால் முடியாததை ஏற்றுக்கொண்டது.





# நீயின்றி நானில்லையே...

பசுவும் இங்கு இல்லாமல்
பாலும் நமக்குக் கிடைக்காதே!
நெல்லும் இங்கு விளையாமல்
சோறும் நமக்குக் கிடைக்காதே!
மரமும் கொடியும் இல்லாமல்
காயும் பழமும் கிடைக்காதே!
நிலமும் நீரும் இல்லாமல்
செடியும் கொடியும் வளராதே!
நீரும் நெருப்பும் இல்லாமல்
சமைத்து உண்ண முடியாதே!
மேகம் கருத்துச் சேராமல்
மழைதான் இங்கு வாராதே!
காற்றின் அசைவு இல்லாமல்
உயிர்கள் இங்கு வாழாதே!





❀ பாடலை இசையுடன் பாடுங்கள்.

## என்ன பயன்?



வாழை மரம்



வாத்து



பேருந்து



உரல்

## சொல்லுங்கள்.

- நமக்கு அதிகம் பயன்படுவது எது?
- ஒரு பயனும் இல்லாத ஏதாவது பொருள் உண்டா?

## பாடல் வரிகளை முழுமையாக்குங்கள்.

கோழி இங்கு இல்லாமல்

________ நமக்குக் கிடைக்காதே!

தென்னை ________________

__________________________

சூரியன் ________________

__________________________


## பாடி மகிழ...

### தில்லாலங்கடி தில்லாலே!

சின்னச் சின்னக் கல் பொறுக்கி
சிங்காரமாய்ப் பாலம் கட்டி
பாலத்து மேலே பன்னிக் குட்டி
பபூன் வேசம் போட்டதாம்
தில்லாலங்கடி தில்லாலே
எனக்கு உடம்பு நல்லால்லே!



## நானே வாசிப்பேன்!



சூர்யா சுட்டிப் பையன்.

ஊட்டிக்குப் புறப்பட்டான்.

பேருந்து நிலையம் சென்றான்.

காத்திருந்தான்.

“கோட்டூர்..சூலூர்,,, மூணாறு...”



“ஊசி... வாங்கலையோ ஊசி”

“வாங்க பலூன் வாங்க வாங்க..”

பலவித சத்தங்கள்.

சூர்யா சத்தம் கேட்ட திசை எல்லாம் பார்த்தான்.

பார்த்துக்கொண்டே நின்றான்.

“ஊட்டி.. ஊட்டி... ஊட்டி...”



ஐயோ பாவம்!

இந்தச் சத்தம் மட்டும் கேட்கவில்லை.

ஊட்டிப் பேருந்து போய்விட்டது.

பார்த்து நின்ற ரூபா சிரித்தாள்!

## நான் கற்ற சொற்கள்,

# ஒருவருக்கொருவர்

"எங்கள் துணையின்றி நீ வறண்டு போவாய்!"

நிலத்தைப் பார்த்து ஆறும் குளமும் கூறின.

"நீங்கள் இருப்பதே என் மீது தான்".

நிலம் பெருமை பேசியது.

நிலத்துக்குப் பாடம் புகட்ட முடிவு செய்தன.

ஆறும் குளமும்  நீராவியாகின.

மேகத்தில் சென்று ஒளிந்து கொண்டன.

வறட்சியில் கருகிய நிலம் தன் தவறை உணர்ந்தது.

"காற்றம்மா... காற்றம்மா...

நீரின்றி நானில்லை எனப் புரிந்துகொண்டேன்.

நீரின் கோபத்தைத் தீர்த்து அழைத்து வருவாயா?"





காற்றிடம் நிலம் கெஞ்சியது.

காற்று வானத்திடம் சென்றது.

“நீரின்றி நிலம் வருந்துகிறது;

உங்களை அழைத்து வரச் சொன்னது” என்றது.

“க்கும்... நான் வரமாட்டேன்”

நீர் அடம் பிடித்தது.

நீரைத் தூக்கிக்கொண்டு

மேகம் அங்கும் இங்கும் ஓடியது.

காற்றுக்கு ஒரு உத்தி தோன்றியது.

வேகமாக மேகத்தை நெருங்கியது.

கிச்சு... கிச்சு... கிச்சு.... மூட்டியது.

மேகம் சிரித்தது. நீரும் சிரித்தது.

மழை பொழிந்தது.

நிலமும் குளிர்ந்தது.

## சொல்லுங்கள்.

- ஆற்றிலும் குளத்திலும் நிறைந்திருப்பது எது?
- அது மிக அதிகமாக எங்கிருக்கும்?
- நீங்கள் ஏதாவது தவறு செய்திருக்கிறீர்களா?
- அதற்காக வருந்தியிருக்கிறீர்களா?
- செய்த தவறை எப்படித் திருத்தினீர்கள்?

## கதை சொல்லுங்கள்.

செடியும் கொடியும் மரமும் சேர்ந்தன.

"நாங்கள் பழம் தருகிறோம்;

காய் தருகிறோம்;

நீ என்ன தருகிறாய்?"

நெருப்பைக் கேலி செய்தன.

நெருப்பிற்குக் கோபம் வந்தது.

"எனக்கு உங்களைப் போல் பழம் தர முடியாது;

காய் தர முடியாது;

ஆனால் உங்களை அழிக்க என்னால் முடியும்".

நெருப்புடன் காற்றும் சேர்ந்து கொண்டது.

"இவர்களைச் சும்மா விடக்கூடாது" என்றது.

- கதையைத் தொடர்ந்து சொல்லுங்கள்.

## பாடி மகிழ...

சின்னச் சின்னக் குருவி
சிங்காரக் குருவி
சன்னலோரம் வந்து
கூடு ஒண்ணு கட்டுச்சாம்.



சின்னப் பொண்ணு ஒருத்தி
சின்னக் கையை நீட்டி
சன்னலோரக் கூட்டை
சின்னா பின்னம் ஆக்கினாள்.

கோபம் கொண்ட குருவி
பின்னால போயி
பின்னலிட்ட கொண்டையில
கூடு ஒண்ணு கட்டுச்சாம்.

## நான் உருவாக்கிய சொற்கள்.

அலகு 11

# வேகம்

## வழி என்ன சொல்லுங்கள்



ஔதா ஆமை அழுதுகொண்டே வந்தது.

வழியில் நௌதா நரி மாமாவைப் பார்த்தது.

“ஏன் அழுகிறாய்?”

நௌதா நரி மாமா கேட்டார்.

“பள்ளிக்கு வேகமாகப்

போக வேண்டும்.

வழி என்ன சொல்லுங்கள்”

ஔதா ஆமை கேட்டது.

“குதிரை ஏறிச் சென்றிடு”

நரி மாமா சொன்னார்.

ஆமை குதிரையில்
செல்லத் தொடங்கியது.

நாட்கள் சென்றன.

ஆமை மீண்டும் நரி மாமாவிடம் வந்தது.

“குதிரை வேண்டாம். நானே

ஓட்டிச் செல்லணும்.

வழி என்ன சொல்லுங்கள்.”

“மிதி வண்டி எடுத்திடு.

மிதித்து மிதித்துச் சென்றிடு”

நரி மாமா சொன்னார்.

நாட்கள் சென்றன.

ஆமை மீண்டும் வந்தது.

“மிதிவண்டி வேகம் போதாது.

வேகமாகச் சென்றிட

வழி என்ன சொல்லுங்கள்”

“மோட்டார் வண்டியில் சென்றிடு. .”


..........................................................................................

..........................................................................................

ஆமை மீண்டும் வந்தது.

“...........................................................................







## சொல்லுங்கள்.


- கதையைப் பூர்த்திசெய்து சொல்லுங்கள்.


## என்னென்ன வாகனங்கள்?


- ஔதா ஆமை என்னென்ன வாகனங்களில் சென்றது? அவ்வாகனங்களை வட்டமிடுங்கள்.
- வேறு என்னென்ன வாகனங்களில் சென்றிருக்கும்?
- நீங்கள் எந்தெந்த வாகனங்களில் சென்றிருக்கிறீர்கள்?
- நீங்கள் இதுவரை எந்தெந்த வாகனங்களில் பயணம் செய்ததில்லை?
- உங்களுக்குப் பிடித்த வாகனம் எது? ஏன்?
- நீங்கள் வாங்கினால் எந்த வாகனம் வாங்குவீர்கள்?

## படம் வரைவோம்!



புள்ளிகளை இணைத்து வாகனம் வரையுங்கள்; வண்ணம் தீட்டுவோம்.







## ஒலியும் வாகனமும்.

| | | |
|---|---|---|
| கிணிங் கிணிங் |  | |
| ஹேய்.. ஹேய் |  | |
| டுர் டுர் டுர்ர்ர்ர் |  | |
| பாம் பாம் |  | |
| கூ கூ கூ...<br>குச்.. குச் |  | |
| சொய்ங்...<br>சொய்ங்... |  | |
| டொக் டொக்... |  | |

## வேகமாக மெதுவாக.

குதிரை வண்டி மாட்டு வண்டியை விட வேகமாகப் போகும்.

மாட்டு வண்டி குதிரை வண்டியை விட மெதுவாகப் போகும்.


.............................................................................................................
.............................................................................................................


## வேகமாகச் சொல்ல முடியுமா?

ஔதாவும் மௌதாவும் சௌதாவுடன் கௌதாவைப்

பார்க்கப் பௌவியமாய்ப் போனார்கள்.

## வீட்டிற்கென்ன வழி.




- பள்ளியிலிருந்து உங்கள் வீட்டிற்குச் செல்லும் வழியை வரையுங்கள். சொல்லுங்கள்.

# வண்டி வண்டி நல்ல வண்டி



சின்னச் சின்ன வண்டியாம்
சின்னப் பாப்பா வண்டியாம்
மிதிக்க மிதிக்க ஓடுமாம்
அங்கும் இங்கும் திரும்புமாம்.



அழகு மணியை அடிக்கலாம்
ஆட்களை வழி மாற்றலாம்
சின்னச் சின்ன சந்திலும்
நுழைந்து நாமும் செல்லலாம்.

பயணச் சீட்டு இல்லாமல்
பயணம் நாமும் செல்லலாம்.
காற்றை அசுத்தம் செய்யாமல்
விரைந்து நாமும் செல்லலாம்.



## நான் யார் தெரியுமா?







இறக்கை நானும்
அடிக்காமல்
வானில் நானும்
பறந்திடுவேன்.
நான் யார் தெரியுமா?







எனக்கு இரண்டு
சக்கரங்கள் உண்டு.
நான் ஓட மோட்டார் வேண்டும்.
நான் யார் தெரியுமா?

சக்கரம் ஏதும் எனக்கில்லை.
துடுப்பும்கூட எனக்கில்லை.
ஆனால் நீந்திச் சென்றிடுவேன்.
நான் யார் தெரியுமா?





வகைப்படுத்துங்கள் - காரணம் சொல்லுங்கள்







கதை நேரம் : -

# ஏழு வால் எலி



ஒரு ஊரில் ஒரு எலி இருந்தது.

அதற்கு ஏழு வால் இருந்தது.

அனைவரும் அதை,

"ஏழு வால் எலி, ஏழு வால் எலி"

என்று கேலி செய்தனர்.

எலிக்கு வருத்தமாக இருந்தது.



ஏழு வால் எலி ஆசாரியிடம் சென்றது.

"ஆசாரி ஐயா.. ஆசாரி ஐயா...

ஒரு வாலை வெட்டி விடுங்கள்" என்றது.

ஆசாரி ஐயா ஒரு வாலை வெட்டினார்.

மறு நாள் ....

அனைவரும் அதை,

"ஆறு வால் எலி, ஆறு வால் எலி"

என்று கேலி செய்தனர்.

எலிக்கு வருத்தமாக இருந்தது.

ஆறு வால் எலி ஆசாரியிடம் சென்றது.

..............................................................................................


..............................................................................................




கதையை முழுமைப்படுத்திச் சொல்லுங்கள்.

# பத்திரமாய்ப் போகணும்






✤ படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.


- குரங்குகளுக்கும் முயல்களுக்கும் என்னவாகியிருக்கும்?
- விபத்து ஏன் நடந்தது?
- பேருந்தில் செல்லும்போது எப்படி இருக்க வேண்டும்?
- நீ பேருந்தில் செல்லும்போது எப்படி அமர்வாய்?

## சரியா? தவறா?

















## நானே வாசிப்பேன்.



பௌர்ணமி நாள்.

வானத்தில் வட்ட நிலா.

கௌதமும் சௌமியாவும்

நிலாவைப் பார்த்தனர்.

"அண்ணா எனக்கு

நிலாவைப் பிடித்துத் தா!"

சௌமியா கேட்டாள்.

கௌதம் பாத்திரத்தில் தண்ணீரை நிறைத்தான்.

முற்றத்தில் வைத்தான்.

"இதோ... நிலாவைப் பிடித்துக்கொள்" என்றான்.

சௌமியா சிரித்தாள்.

## நான் கற்ற சொற்கள்

## நாங்களும் போகணும்



ஆமைக்கு நல்ல யோசனை தோன்றியது.

வெளவாலிடம் சொன்னது.

வெளவாலும் சம்மதித்தது.

இருவரும் நரி மாமாவிடம் சென்றனர்.

“மாமா மாமா அவசரம்.

நாங்கள் ஏழு மலையைக் கடக்க வேண்டும்.

ஏழு கடலைக் கடக்க வேண்டும்.

வழி என்ன சொல்லுங்கள்.”


நரி மாமா யோசித்தார். விரைந்து செயல்பட்டார்.

ஆகாய விமானம் தயாரானது, கப்பல் தயாரானது.





“நாங்களும் போகணும். வழி என்ன சொல்லுங்கள்”



மற்றவர்கள் நரி மாமாவைச்

சூழ்ந்து கொண்டார்கள்.

நரி மாமா யோசித்தார்.

தொடர்வண்டியை வடிவமைத்தார்.

ஆகாய விமானம் வானில் பறந்தது.

தொடர்வண்டி அனைவரையும்

ஏற்றிக்கொண்டு...

“க்கூகூ... க் கூகூ” என்று புறப்பட்டது.





## எச்சரிக்கை!

- பேருந்தில் பயணம் செய்யும்போது எப்படிப் பயணம் செய்ய வேண்டும்?
- எப்படிப் பயணம் செய்யக்கூடாது என்று எச்சரிக்கை செய்யுங்கள்.

• படிக்கட்டில் நின்று பயணம் செய்யாதீர்கள். •

• •

• •

## ஒவ்வொரு வண்டியிலும்.

மிதிவண்டி, மோட்டார் வண்டி, மகிழுந்து, பேருந்து போன்றவற்றில் செல்லும்போது எப்படிச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? சொல்லுங்கள்.

## சொல்லுங்கள்.

- அடிபட்ட குரங்குகளும் முயல்களும் உயிர் பிழைத்திருக்குமா?
- அவை மீண்டும் ஆமையுடன் சண்டையிடுமா?
- காட்டுப் பிராணிகள் எல்லாம் அடுத்த காட்டு மருத்துவமனைக்கு ஏன் புறப்பட்டன?
- அவர்கள் அங்குப் போய் என்ன செய்வார்கள்?
- நீ யாரையாவது பார்க்க மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறாயா?

## யாருக்கு என்ன பெயர்?

- பேருந்தை ஓட்டுபவர்
- கப்பலை ஓட்டுபவர்
- தொடர்வண்டியை ஓட்டுபவர்
- ஆகாயவிமானத்தை ஓட்டுபவர்

## இவை நிற்கும் இடம் எது?

- பேருந்து
- தொடர்வண்டி
- கப்பல்
- ஆகாயவிமானம்

## தெரியுமா?

- உங்கள் ஊர் முக்கிய சாலையில் ஓடும் வாகனங்களில் எந்த வகை வாகனம் அதிகம் ஓடுகிறது?
- விபத்து நடந்தால் யார் யாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்?
- அவர்களது தொலைபேசி எண் என்ன?

## ஓர் எழுத்தை நீக்கினால்...

- ஆகாயம் -
- விமானம் -

## ஒளிந்திருப்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

- புகைவண்டி - இதில் ஒளிந்துள்ள உடலுறுப்பு எது?
- கப்பல் - இதில் ஒளிந்துள்ள நம் உடல் உறுப்பு என்ன?

## சொல்லிற்குள் சொற்கள்.

- கப்பல் - கல் பல்
- கட்டுமரம் -
- ஆகாய விமானம் -
- குதிரை வண்டி -

## செயல் திட்டம்.

எனக்குத் தெரிந்த வாகனங்கள்.

## பொம்மை வாகனங்கள்.

- உங்களிடம் என்னென்ன வாகனப் பொம்மைகள் உள்ளன?
- அவற்றை எப்பொழுது வாங்கினீர்கள்?
- உங்களிடம் உள்ள பொம்மை வாகனத்தில் உங்களுக்குப் பிடித்தது எது? ஏன்?

## சொல்லிப் பழகுங்கள்.

கொக்கு நெட்டைக் கொக்கு
நெட்டைக் கொக்கு இட்ட முட்டை கெட்ட முட்டை.

இது யார் தச்ச சட்டை - எங்க
தாத்தா தச்ச சட்டை

காலின் பெருவிரல் உரலில் பட்டு
உரல் உருளுது புரளுது

அலகு 12

# ஒற்றையா இரட்டையா?

## சுட்டிப் பூனை



சுட்டிப் பூனை டிங்கு
வீட்டைச் சுற்றி ஓடியது.
மஞ்சு மேசையிலுள்ள
பொருட்களை அடுக்கினாள்.
"டிங்கு ஓடாதே" என்றாள்.
"மியாவ்... மியாவ்...." எனத்
தலையை ஆட்டியது.
டிங்கு அமைதியாக
மேசையைப் பார்த்தது.
"ஹாய்....! அழகான பந்து...."
பூனை பந்தை உருட்டியது.



பந்து உருண்டு ஓடியது.

“ஹா... ஹா...” எனச் சிரித்தது பூனை.

பந்து ஓட்டைக்குள் விழுந்தது.

“ஐயோ... என் பந்து” என்றாள் மஞ்சு.

“மியாவ்... மியாவ்...” என்றது பூனை.

மஞ்சு கோபத்தோடு பார்த்தாள்.

பூனை ஓடியது.

மஞ்சு ஓட்டைக்குள் தண்ணீர் ஊற்றினாள்.

பந்து வெளியே வந்தது.

தூரத்தில் நின்று பார்த்த பூனை,

“ஹய்யா... ஹீ... ஹீ...” என்று

கை தட்டிச் சிரித்தது.






## சொல்லுங்கள்.

- பூனை கைதட்டிச் சிரிக்கக் காரணம் என்ன?
- மஞ்சு செய்தது போல் நீங்களும் செய்ததுண்டா?

## எழுதுங்கள்.

- மஞ்சுவின் பூனையின் பெயர்

## சொற்சூரியன்




தூங்கு

## சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தை நிரப்புவோம்!

ஓடியது | ஓடினான் | ஓடின | ஓடினாள் | ஓடினர்

சோமு வேகமாக ______

பூனை தாவித் தாவி ______

பந்துகள் உருண்டு ______

மஞ்சு விரைவாக ______

மைதானத்தில் குழந்தைகள் ______

## எழுத்துகளை வரிசைப்படுத்துங்கள்; சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

சு ப ஞ் — ______

ள் ம ச ஞ் — ______

ஞ் சி இ — ______

ம் ப ச ஞ் — ______

வாசிப்போம்!

# டிங்குவும் மங்குவும்


டிங்குவிற்கும் தோழி மங்குவிற்கும் நுங்கு தின்ன ஆசை.

அங்கும் இங்கும் ஓடின.

எங்கும் நுங்கு இல்லை.

களைத்துப் போய்த் தூங்கின.

வங்கியின் அருகே தங்கம்மாவின் நுங்குக் கடை.



டிங்கு நுங்கு வாங்கியது.

“எங்கே என் பங்கு?” மங்கு கேட்டது.

டிங்கு ஓடியது. மங்கு விரட்டியது.

வழியில் ஒரு சிங்கம்.

டிங்குவும் மங்குவும் திரும்பின.


தலை தெறிக்க ஓடின.



- வாசித்த பகுதியில் ‘ ங் ’ என்ற எழுத்து வரும் எத்தனை சொற்களைக் கூற முடியும்?

## வழிகாட்டுவோம்.

* பால் குடிக்கப் பூனைக்கு வழிகாட்டுங்கள்.
  எந்த வழி? இலையா? பூவா?





## நான் யார்?

ஊரே உறங்கிக் கொண்டிருந்தாலும்
நான் ஓடிக்கொண்டே இருப்பேன்.
நான் யார்?

* இலைகளில் உள்ள எழுத்துகளை வரிசைப்படுத்துங்கள்; விடைதெரியும்.

# பந்தை விட்டு விடாதே


போட்டி உடனே ஆரம்பிக்கும்...
போட்டியாளர்கள்
போட்டிக்குத் தயாராகவும்...


டிங்கு ஓடு... ஓடு...
வேகமாக ஓடு
பந்து கீழே விழாமல்
பார்த்துத் தட்டு.



வேகம்... வேகம்... இன்னும்
கொஞ்சம் தூரம்தான்
மங்கு வேகமாகப் போ
வெற்றி உனக்கே...


ஹையா வெற்றி நமக்கே!

## சொல்லுங்கள்.

- படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.
- பந்தைத் தட்டும் போட்டியில் வெற்றி பெற்றது யார்?
- டிங்குப் பூனையை உற்சாகப்படுத்தியது யார்? யார்?
- கிட்டு முயல் தோல்வியடையக் காரணம் என்ன?
- நீங்கள் என்னென்ன விளையாட்டுகள் விளையாடுவீர்கள்?

## குரங்காட்டம் விளையாடுங்கள்.



குழந்தைகள் வட்டமாக நிற்கட்டும்: அவரவர் நிற்கும் இடத்தை வட்டமிடவும். வட்டத்தில் நிற்பவர் வட்டத்தை விட்டு நகரக்கூடாது. தங்களது கையிலுள்ள பந்தை எதிரில் உள்ளவர்களுக்கு எறியலாம்; நடுவில் நிற்பவர் பந்தைப் பிடிக்கவோ தொடவோ செய்தால் எறிந்தவர் நடுவில் சென்று நிற்க வேண்டும். இப்படியே விளையாட்டைத் தொடரலாம். நடுவில் நிற்பவர் கையில் பந்து கிடைக்காமல் விளையாடுவதே விளையாட்டின் நோக்கம்.

## நீங்கள் விளையாடும் விளையாட்டுகளுக்கு ☑ அடையாளம் இடுங்கள்.



நொண்டி



✓ கபடி




பச்சக் குதிரை



குலை குலையாய்



பல்லாங்குழி



கிட்டிபுள்



சில்லு



பலூண்



கோலி

## சொல்லுங்கள்.

- உனக்குப் பிடித்த விளையாட்டு எது?
- அதை எப்படி விளையாடுவாய்?



# சர்க்கஸ் பார்க்கலாம்

வண்ண வண்ணக் கூடாரத்தில்
சர்க்கஸ் ஒன்று நடக்குது...!
கோமாளிகள் பாட்டுப் பாட
குரங்குக் கூட்டம் ஆடுது!

குலுங்கிக் குலுங்கி யானைக்குட்டி
கும்மாளம் தான் போடுது...!
கூண்டுக்குள்ளே கரடி ஒண்ணு
பந்தைப் போட்டு ஆடுது...!

ஒத்தச் சக்கரச் சைக்கிள் ரெண்டு
சுத்திச் சுத்தி ஓடுது...!
ஒய்யாரமாய் அதுக்கு மேலே
புலி ஒண்ணு ஆடுது!




## சொல்லுங்கள்.

- பாடலை இசையுடன் பாடவும்.
- பிடித்தமான பாடல் வரிகள் எவை? ஏன்?
- நீங்கள் சர்க்கஸ் பார்த்திருக்கிறீர்களா?
- சர்க்கஸில் யாரெல்லாம் இருப்பார்கள்?
- சர்க்கஸில் என்னென்ன விலங்குகளைப் பார்த்திருக்கிறீர்கள்?
- எந்தெந்த விலங்குகள் என்னென்ன செய்யும்?

## நானே வாசிப்பேன்.

அமுதன் என்ற சிறுவன்தான்
ஆடு ஒன்று வாங்கினான்.
இலையும் தழையும் கொடுத்தானே
ஈயும் அண்டாது காத்தானே.
உன்னைப் போன்ற ஆடுதான்
ஊரில் இல்லை என்றானே!
எருமை கூடச் சேர்ந்துதான்
ஏலமலைக்கு போனதுவாம்.
"ஐயோ.."
ஒளிந்து நின்ற ஆட்டைத்தான்
ஓநாய் ஒன்று பிடித்திடவே
ஔவை வந்து விரட்டிடவே
அஃது தப்பிப் பிழைத்ததாம்.



## முதல் எழுத்துகளை எழுதுங்கள்; வாசியுங்கள்.

## மாதிரியைப்போன்று வரிசைப்படுத்துங்கள்!

அணில்
ஆமை
இடி
ஈட்டி
உடை
ஊசி
எட்டு
ஏலம்
ஐவர்
ஒட்டகம்
ஓணான்
ஔடதம்

ஆப்பம் ஈசல்
இரும்பு ஏணி
எறும்பு
அடுப்பு ஐயம்
ஊதல் ஒன்று
உலக்கை ஓடம்
ஔவையார்